# விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## கற்றல் பயிற்சித்தாள்

**நான்காம் வகுப்பு:** **தமிழ்**

**I.பொருள் தருக:**

1.என்னில் - என்னுள்

2.வல்லமை - வலிமை

3.நிரம்ப - நிறைய

4.தையல் - பெண்கள்

5. துயரம் - துன்பம்

**II.பிரித்து எழுதுக:**

1.பெரும்படை - பெருமை + படை

2.இன்றளவும் - இன்று + அளவும்

3.கையசைத்து - கை + அசைத்து

4.சிறு பயிறு - சிறுமை+ பயிறு

5.தேர்ந்தெடுக்க - தேர்ந்து + எடுக்க

**III. சேர்த்து எழுதுக:**

1. இ + அணை = இவ்வணை

2. பட்டு + ஆடை = பட்டாடை

3. ஓர் + இலை = ஓரிலை

4. முடிய + இல்லையே = முடியவில்லையே

5. வாழ் + இடங்கள் = வாழிடங்கள்

**IV. எதிர்ச்சொல் தருக:**

1.அடித்தளம் × மேல் தளம்

2.உயர்ந்து × தாழ்ந்து

3.வாங்கிவந்த × விற்று வந்த.

4.ஏற்றி × இறக்கி

5.குட்டை × நெட்டை

**V. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அன்னைத் <u>தமிழே</u> பாடலில் உயிரில் கலந்தவள்.

2. தமிழ்நாட்டின் தேசியப்பறவை <u>மரகதப்புறா.</u>

3. தமிழ்நாட்டின் தேசிய நடனம் <u>பரதநாட்டியம் .</u>

4. தமிழ்நாட்டின் தேசிய மரம் <u>பனைமரம்.</u>

5. தமிழ்நாட்டின் தேசிய விலங்கு <u>வரையாடு.</u>

6. தமிழ்நாட்டின் தேசிய விளையாட்டு <u>கபடி.</u>

7. கல்லணை <u>தஞ்சாவூர்</u> மாவட்டத்தில் உள்ளது.

8. கல்லணையைக் கட்டியவர் <u>கரிகாலச்சோழன்</u>.

9. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கியதுணையாறு <u>கொள்ளிடம்.</u>

10. மலைகள் <u>பச்சைப்பட்டாடை</u> உடுத்தியது போல் காட்சி அளித்தது.

**VI. வினா விடை:**

1 சொல்லில் விளையாட சொல்லிக் கொடுத்தவர் யார்?

**சொல்லில் விளையாட சொல்லிக் கொடுத்தவள் அன்னைத் தமிழ்.**

2. பண்டைய இலக்கியங்கள் எதில் எழுதப்பட்டன?

**பண்டைய இலக்கியங்கள் கூந்தல் பனை என்னும் பனை ஓலையால் எழுதப்பட்டன.**

3. காட்டின் தலைவர் யார்?

**காட்டின் தலைவர் புலி.**

4. புலி என்ன செய்தது?

**புலி அனைவரையும் பயமுறுத்தி வந்தது.**

6. பனை மரத்தை வாழிடமாகக் கொண்ட பறவைகள் யாவை?

**உழவரான், பனங்காடை ஆகிய பறவைகள் பனைமரத்தை வாழிடமாக கொண்ட பறவைகள் ஆகும்.**

7. பனஞ்சாறில் இருந்து கிடைக்கும் இனிப்பு பொருட்கள் யாவை?

**பனஞ்சாறிலிருந்து கிடைக்கும் இனிப்பு பொருட்கள் கருப்பட்டி, பனங்கற்கண்டு.**

8. திணை என்றால் என்ன?

**திணை என்றால் ஒழுக்கம் என்பது பொருளாகும்.**

9.பால் என்றால் என்ன?

**பால் என்றால் பகுப்பு என்பது பொருளாகும்.**

10.உயர்திணையில் வரும் பால்கள் யாவை?

**ஆண்பால், பெண்பால், பலர்பால்.**

11.அஃறிணையில் வரும் பால்கள் யாவை?

**ஒன்றன்பால் , பலவின்பால்.**

12. முளைப்பாரிக்கு பயன்படுத்தப்படும் பயிர்கள் யாவை?

**காராமணிப்பயிறு, மணிப்பயிறு.**

13.மலைகள் எவ்வாறு காட்சி அளித்தன?

**மலைகள் பச்சைப்பட்டாடை உடுத்தியது போல் காட்சி அளித்தன.**

14. அமுதன் ஏன் திரும்பினான்?

**நாய்க்குட்டியின் சத்தம் கேட்டு அமுதன் திரும்பினான்.**

14.கரிகாலனின் இயற்பெயர் என்ன?

**கரிகாலனின் இயற்பெயர் வளவன்.**

15. கல்லணை எப்பொழுது கட்டப்பட்டது?

**கல்லணை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.**

16.கல்லணையால் வளம் பெறும் மாவட்டங்கள் யாவை?

**திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்கள் வளம் பெறுகின்றன.**

17.தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணைகள் யாவை?

**கல்லணை, மேட்டூர் அணை, வைகை அணை, சாத்தனூர் அணை மற்றும் பவானிசாகர் அணை.**

18.காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**காலம் மூன்று வகைப்படும் .அவை இறந்த காலம் ,நிகழ் காலம், எதிர் காலம்.**

19.வெற்றி வேற்கை நூலின் ஆசிரியர் யார்?

**வெற்றிவேற்கை நூலின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியர்.**

20.தெள்ளிய….எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் எது?

**தெள்ளிய ……. எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் வெற்றிவேற்கை.**